வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ஸ்ரீனிவாசன்

நாள் 31.05.2024 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

57 தொகுதிகளில் நாளை நடைபெறவுள்ள, ஏழாவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவிற்கான, எல்லா ஏற்பாடுகளும், செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி, கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் இன்று இரண்டாவது நாளாகவும், தியானத்தில் ஈடுபட்டுள்ளார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதிக்கான வாக்கு எண்ணும் பணிகளைக் கண்காணிக்க, ஒரு பொதுப் பார்வையாளர், மற்றும், 12 பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

புகையிலையின் பயன்பாட்டினால், பொது சுகாதாரத்திற்கு, தீவிர அச்சுறுத்தல் ஏற்படுவதாக மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

ஏழாம் கட்டம் – (20)

7 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட 57 தொகுதிகளில் நாளை நடைபெறவுள்ள, ஏழாவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவை தேர்தல் வாக்குப் பதிவிற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் தலா 13 தொகுதிகளும், மேற்கு வங்கத்தில் 9, பீஹாரில் 8, ஒடிஷாவில் 6, இமாச்சல பிரதேசத்தில் 4, மற்றும், ஜார்கண்டில் 3 தொகுதிகளும், சண்டிகரில் ஒரு தொகுதியும் இதில் அடங்கும். நாளைய தேர்தலில், பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. அனுராக் தாக்கூர், மூத்த

காங்கிரஸ் தலைவர் திரு. விக்ரமாதித்யா சிங், மூத்த திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் திரு. அபிஷேக் பானர்ஜி உள்ளிட்டோர், முக்கிய வேட்பாளர்களாக போட்டி களத்தில் உள்ளனர். நாளைய தேர்தலில் சுமார் 10 கோடியே 60 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மொத்தம் 10 லட்சத்து 90 ஆயிரம் தேர்தல் அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். ரொக்கப் பணம் மற்றும் மதுபான புழக்கத்தை தடுக்கும் வகையில், மாநிலங்களுக்கு இடையிலான எல்லையில் சுமார் 90 இடங்களிலும், சர்வதேச எல்லையில் சுமார் 200 இடங்களிலும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையிலான ஆறு கட்டங்களில் பதிவான வாக்குகளும், நாளைய இறுதிக் கட்ட மக்களவைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகளும், ஜூன் நான்காம் தேதி எண்ணப்படும்.

### மோடி – தியானம் (12)

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி, கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் இன்று இரண்டாவது நாளாகவும், தியானத்தில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார். நேற்றிரவு பகவதி அம்மன் கோவிலில் வழிபட்ட பின்னர், தியானத்தில் அமர்ந்த அவர், நாளை வரை 45 மணி நேரத்திற்கு, தியானம் மேற்கொள்வார். முக்கடல் சங்கமத்தில் பாறை மீது அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தியானத்தில் ஈடுபட்டுள்ள இடம், 1892ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் தியானம் செய்த, அதே இடமாக கருதப்படுகிறது. 33 ஆண்டுகளுக்கு முன்னர், கடந்த 1991ஆம் ஆண்டு, டிசம்பர் 11ஆம் தேதி, குமரி முதல் காஷ்மீர் வரையிலான, ஏக்தா யாத்திரையில் திரு. நரேந்திர மோடி பங்கேற்றதும் குறிப்பிடத்தக்கது.

### அமித்ஷா (7)

மத்திய உள்துறை அமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு.அமித்ஷா, இன்று தமது குடும்பத்தினருடன் திருப்பதி வெங்கடேஸ்வரர் கோவிலில் வழிபட்டார். திருமலா திருப்பதி தேவஸ்தான வாரியத்தின் தலைமை அதிகாரி திரு. தர்மா ரெட்டி, தலைமை அர்ச்சகர் மற்றும் இதர அதிகாரிகள், கோவிலில் மத்திய அமைச்சரை வரவேற்று, சுவாமி தரிசனம் செய்து வைத்தனர். வேத மந்திரங்களுடன் கூடிய ஆசிர்வசனம் மற்றும் பிரசாதமும் வழங்கப்பட்டது.

தேர்தல் பறிமுதல் (5 )

நடப்பு மக்களவை தேர்தல் காலத்தில், நாடு முழுவதும் வருமான வரித் துறையினர் மேற்கொண்ட சோதனைகளில், மொத்தம் ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பில், ரொக்கப் பணமும் நகைகளும் பறிமுதல் செய்யப் பட்டுள்ளன. இது, இதுவரையிலான மக்களவைத் தேர்தல்களில் இல்லாத உயர் அளவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிகராகுவா (6)

நிகராகுவா நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. டெனிஸ் மான்கேடா, இன்று தொலைபேசி மூலம் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை தொடர்பு கொண்டு பேசினார். இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர அக்கறையுள்ள சர்வதேச பிரச்சனைகள் குறித்து, இதில் விவாதிக்கப் பட்டதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சமூக ஊடகப்பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ரேவண்ணா (11 )

கர்நாடகத்தில் ஹாசன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பிரஜ்வல் ரேவண்ணா இன்று அதிகாலை பெங்களூர் கெம்பே கௌடா சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது போலீசாரால் கைது செய்யப்பட்டார். வெளிநாட்டில் இருந்து அவர் இந்தியா திரும்புவதாக, interpol அமைப்பிடம் இருந்து தகவல் கிடைத்ததைத் தொடர்நது, கர்நாடக காவல்துறையின் சிறப்பு புலனாய்வு பிரிவினர், உரிய ஏற்பாடுகளுடன் கைது நடவடிக்கை மேற்கொண்டனர். மத சார்பற்ற ஜனதா தளத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரேவண்ணா, தமது வீட்டில் வேலை செய்த பெண் ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக, குற்றச்சாட்டிற்கு ஆளானதைத் தொடர்ந்து, கடந்த 27ஆம் தேதி வெளிநாடு சென்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆரோவில் (10 )

ஆரோவில் அமைப்பின் 67ஆவது நிர்வாகக் குழுக் கூட்டம், மற்றும் சர்வதேச ஆலோசனைக் குழுக் கூட்டம், ஆரோவில் அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. தமிழக ஆளுநர் திரு. R.N. ரவி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், புதுச்சேரி துணைநிலை ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன், ஆரோவில் நிர்வாக அமைப்பின் செயலர் திருமதி ஜெயந்தி ரவி, மற்றும், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு, ஆரோவில் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதித்தனர். முன்னதாக,

ஆரோவில் வந்தடைந்த துணைநிலை ஆளுநரை ஆரோவில் செயலர், விழுப்புரம் மாவட்ட செயலர், காவல்துறை கண்காணிப்பாளர், மற்றும் நிர்வாகக் குழுவினர் வரவேற்றனர்.

**தமிழ்நாடு (9 )**

தமிழகத்தில் உள்ள அனல் மின் நிலையங்கள் மற்றும் நீர் மின்சார நிலையங்களில், **இலக்கைத் தாண்டி** மின் உற்பத்தி செய்யப் பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. பேரிடர் காலங்களில், போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குறுகிய காலத்தில் மின் விநியோகம் சீரமைக்கப் பட்டுள்ளதாகவும், மாநில அரசு கூறியுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலமாக, சாதனை அளவில், தினசரி 454 மில்லியன் **யூனிட் மின்சாரம்**, எவ்வித தடங்கலும் இன்றி, விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு மேலும் தெரிவித்துள்ளது.

**குலோத்துங்கன் 1 (18 )**

புதுச்சேரி மக்களவை தொகுதியில் கடந்த 19ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் ஜுன் 4ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை, யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பிராந்தியங்களிலும் மொத்தம் 5 மையங்களில் எண்ணப்பட உள்ளன. புதுச்சேரி, லாஸ்பேட் மோதிலால் நேரு பாலிடெக்னிக் கல்லூரி, மகளிர் பொறியியல் கல்லூரி ஆகிய 2 மையங்களிலும், காரைக்காலில் அறிஞர் அண்ணா அரசு கலை-அறிவியல் கல்லூரி, ஏனாமில் டாக்டர் SRK அரசு கலைக்கல்லூரி, மற்றும், மாஹேயில் ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலைப் பள்ளியிலும், 4ஆம் தேதி காலை 8 மணிக்குத் தொடங்கி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று, புதுச்சேரி மாவட்ட ஆட்சியரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான திரு.குலோத்துங்கன், இன்று செய்தியாளர் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார். அனைத்து 5 வாக்கு எண்ணிக்கை மையங்களிலும், கண்காணிப்பாளர், உதவியாளர், நுண் பார்வையாளர் என ஆயிரத்து இரண்டு பேர் பணி அமர்த்தப் பட்டுள்ளதாகவும், மொத்தம் 12 துணைத் தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் மேற்பார்வையில், வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். அனைத்து வேட்பாளர்கள் மற்றும அவர்களின் முகவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும் என்றும், அடையாள அட்டையின்றி வாக்கு எண்ணிக்கை

## குலோத்துங்கன் 2 (10 )

மையங்களுக்குள், எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

புதுச்சேரி மக்களவை தொகுதிக்கான வாக்கு எண்ணும் பணிகளைக் கண்காணிக்க, ஒரு பொதுப் பார்வையாளர் மற்றும் 12 பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு 100 மீட்டர் தூரத்திற்குள் வாகனப் போக்குவரத்து தடை செய்யப்படும் என்றும், வாக்கு எண்ணிக்கை தினமான 4ஆம் தேதி முழுவதும், அனைத்து மதுபானக் கடைகளை மூட உத்தரவிடப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## பத்திரிக்கையாளர் (10 )

புதுச்சேரியில் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ கடிதம் வைத்துள்ள பத்திரிக்கையாளர்கள் மட்டுமே வாக்கு எண்ணிக்கை மையங்களுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது. வாக்கு எண்ணும் அறைக்குள் 10 பேர் கொண்ட குழுவாக, பத்திரிக்கையாளர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றும், மற்றவர்கள் வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள ஊடக மையத்தில் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. மடிக்கணினி மற்றும் கை பேசி போன்ற சாதனங்களை, ஊடக மையத்தில் மட்டுமே பயன்படுத்தலாம் என்றும், வாக்கு எண்ணும் அறைக்குள் கை பேசிகளைக் கொண்டு வர அனுமதி இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## புகையிலை (15 )

புகையிலையின் பயன்பாட்டினால், பொது சுகாதாரத்திற்கு, தீவிர அச்சுறுத்தல் ஏற்படுவதாக மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா கூறியுள்ளார். உலக புகையிலை மறுப்பு தினமான இன்று, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசுகையில், புகையிலை தொடர்பான நோய்களால், இந்தியாவில், ஆண்டு 13 லட்சம் பேர் உயிரிழப்பதாகவும், இதனால் நாட்டின் மருத்துவத் துறைக்கு, கணிசமான அளவில், பொருளாதாரச் சுமை ஏற்படுவதாகவும் கூறினார்.

புகையிலையின் பயன்பாட்டைத் தடுக்க, உள்ளூர் நிலை முதல், உலக நிலை வரை பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக திரு.அபூர்வ சந்திரா கூறினார். இந்தியாவில், தேசிய புகையிலை கட்டுப்பாட்டு சட்டத்தின் கடுத்தமான அமலாக்கம் உட்படப் பல்வேறு புகையிலைத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு, நடப்பு 2024ஆம் ஆண்டில், முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று, அவர் தெரிவித்தார். தீவிர விழிப்புணர்வு இயக்கங்களும், புகையிலை இல்லா மண்டலங்களை உருவாக்கும் பணிகளும் இதில் அடங்கும் என்று அவர் மேலும் கூறினார்.

பால் பவன் (9)

புதுச்சேரியில், கடந்த மே 2ஆம் தேதி முதல், ஜவஹர் சிறுவர் இல்லத்தில், 1 மாத காலம் நடைபெற்ற, குழந்தைகளுக்கான கோடைக் கொண்டாட்ட சிறப்பு முகாமில், கலந்து கொண்டு, இசை, நடனம் மற்றும் பல்வேறு விளையாட்டுகளைக் கற்றுக்கொண்ட குழந்தைகளுக்கு, பள்ளிக் கல்வித் துறை துணை இயக்குநர் திரு. முனுசாமி, இன்று சான்றிதழ் வழங்கி பாராட்டினார். ஜவஹர் பால் பவன் தலைமை ஆசிரியர் திரு. மணிவேல் உள்ளிட்டோர், விழாவில் கலந்து கொண்டனர். கோடைக்கால சிறப்பு முகாமில், அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர்.

வானிலை (12 )

தென் தமிழகப் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம், நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகள், தேனி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, உள்ளிட்ட மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஜூன் 6ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மீனவர்கள், ஜூன் 3ஆம் தேதி வரை, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளுக்கும், 4ஆம் தேதி வரை, வங்கக் கடல் பகுதிகளுக்கும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருப்பத்தூரில் 4 செண்டி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

கிரிக்கெட் (7 )

ஐசிசி ஆடவர் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள், வரும் 2ஆம் தேதி முதல், 29ஆம் தேதி வரை, அமெரிக்கா, மற்றும், மேற்கிந்திய தீவுகளில் நடைபெற உள்ளன. முதல் முறையாக நான்கு பிரிவுகளில், இருபது நாடுகள் இப்போட்டிகளில் பங்கேற்கின்றன. இந்தியா, பாகிஸ்தான், கனடா, அயர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள், ஏ - பிரிவில் இடம் பெற்றுள்ளன. வரும் 5ஆம் தேதி நியூயார்க்கில், இந்தியா, தனது முதலாவது போட்டியில், அயர்லாந்து அணியுடன் மோத உள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

57 தொகுதிகளில் நாளை நடைபெறவுள்ள, ஏழாவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவிற்கான, எல்லா ஏற்பாடுகளும், செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி, கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் இன்று இரண்டாவது நாளாகவும், தியானத்தில் ஈடுபட்டுள்ளார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதிக்கான வாக்கு எண்ணும் பணிகளைக் கண்காணிக்க, ஒரு பொதுப் பார்வையாளர், மற்றும், 12 பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

புகையிலையின் பயன்பாட்டினால், பொது சுகாதாரத்திற்கு, தீவிர அச்சுறுத்தல் ஏற்படுவதாக மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/MS/VM